# தமிழ் மன்றம்

## 3 வது

## ஆண்டு மலர்

**Tamil Mantram e.V.**

21.12.1991.

**FRANKFURT**

# TAMIL MANTRAM E.V.

Westendstraße 92, 6000 Frankfurt am Main

## Our patrons

Mrs. Kamala Kanagasabai
Mr. S.Nithiyananthan
Mr. S.Mahendran

## Executive Committee

| | |
|---|---|
| President | Mr. R.Sripathy |
| Vice-President | Mr. B.Balasubramaniam |
| Secretary | Mr. M.Gunaratnam |
| Vice-Secretary | Mr. M.Vickraman |
| Teasurer | Mr. V.Pathmanathan |
| Asst.-Teasurer | Mr. S.Ananthaselvam |
| Auditor | Mr. P.Luke Loganathan |
| Editor | Mr. S.Sivasubramaniam |
| Sub-Editor | Mr. R.Sanchayan |

# வரவேற்கின்றோம்

கலைத்தாயின் வடிவெடுத்து தரணியெங்கும்,
புகழ்பரப்ப தன்னிகரல்லா தமிழனையும்,
இசையோடு கூடிய நடனங்களையும்,
அரும் பெரும் நாட்டிய நாடகங்களையும்
கண்டுகளித்திட, சுவைத்திட வந்திடுவீர்
எமதருமைப்பெரியோரே, தாய்மாரே
குழந்தைகளே உங்கள்
அனைவரையும்

வ
ரு
க
வ
ரு
க

என

வ
ர
வே
ற்
கி
ன்
றோ
ம்



தமிழ் மன்றம்
பிராங்பேர்ட்

## தமிழ் மொழி வாழ்த்து.

தான தனத்தன தான தனத்தன தான தந்தான

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண் மொழி வாழியவே!

ஏழ் கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ் கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே!

## மன்ற கீதம்

வாரீர் வாரீர் ஒன்றிணைந்து வாரீர்
தமிழ் மன்றம் வளர்த்திட அன்புடன் வாரீர்
தமிழ் வளர்ச்சி பெற்று நாம் திளைத்திட வாரீர்
வாரீர் வாரீர் ஒன்றிணைந்து வாரீர்!

தமிழ் மன்றம் ஒன்றினை தொடங்கியே விட்டோம்
எம் மானம் காத்து தமிழினை வளர்ப்போம்
கல்வி கலை கலாச்சாரம் பேணியே காப்போம்
வாரீர் வாரீர் ஒன்றிணைந்து வாரீர்!

பிராங்பேர்ட் நகரில் தமிழ் மன்றம் அமைத்தோம்
ஜெர்மன் நகரெங்கும் கிளையினை அமைப்போம்
இன்னலுறும் மாணவரை உயர்கல்விக்கு அழைப்போம்
வாரீர் வாரீர் ஒன்றிணைந்து வாரீர்!

கற்றவரும் மற்றவரும் போற்றிட வேண்டும்
பல் கலைகள் கற்று நாம் தேறிட வேண்டும்
பிறமொழிகள் பயின்று நாம் வளர்ந்திட வேண்டும்
வாரீர் வாரீர் ஒன்றிணைந்து வாரீர்!

நாட்டிய நடனங்கள் சுவைத்திட வேண்டும்
நல்ல பல கவிதையினைச் செவித்திட வேண்டும்
முத்தமிழ் பரப்பி எம்மொழி காத்திட வேண்டும்
வாரீர் வாரீர் ஒன்றிணைந்து வாரீர்!

தலைவர்
தமிழ்மன்றம்

"உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும் " (பாரதியார்)

அன்பு தமிழ் மன்ற அங்கத்தவர்கட்கு !

இன்று தமிழ் மன்றத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்படும் வைபபத்தில் எனது உளம் கனிந்த இனிய நல்வாழ்த்துகளை என் சார்பிலும் தமிழ்மன்றத்தின் சார்பிலும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நமது தாயக மண்ணில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சிங்கள இராணுவத்தின் வன்செயல்களினால், நாம் ஈழத்தில் இருந்து புலம் பெயர்ந்து உலகெங்கும் சிதறுண்டு வாழ நிர்ப்பந்தப்பட்டு இருக்கின்றோம்.

ஓர் அந்நிய நாட்டில் சொந்த மொழி, கலை கலாச்சாரம், வாழ்க்கைமுறை இவைகளைப் பேணிக்காப்பதும் இங்கு வாழும் தமிழ்க் குழந்தைகளுக்கு அதைப்புகட்டுவதும் மன்றத்தின் முக்கிய பணி ஆகிறது.

இப்பணியை வளர்ப்பதற்குத் தோளோடு தோள் கொடுத்து, ஒருவரை ஒருவர் மதித்து செயற்பாடுகளைக் கவனித்து, மன்ற நிர்வாகிகள், மன்ற உறுப்பினர்கள், மற்றும் ஏனைய நண்பர்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் தனியே பிரிந்து இருந்து செயற்படுவதன் மூலம் எமது கலாச்சாரங்களை வளர்ப்போம் அல்லது காப்போம் என்பது சாத்தியமற்ற ஒன்றாகும். அதனால் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து செயற்படுவோமாக.

வணக்கம்

வாழ்க தமிழ் ! வளர்க கலை !

ஒப்பம் ஸ்ரீபதி.

Liebe Tamil-Mantram Mitglieder,

im Namen des Tami-Mantram begluecckwuensche ich herzlich zum 3-jaehrigen Gruendungsjubilaeum des Tamil-Mantram.

Wegen den singalesischen Soldaten und Ihren Terror in unserer Heimat sind wir gezwungen uns auf der ganzen Welt, von der Heimat vertrieben, zu verteilen.

In einem fremden Land moechten wir unsere Lebensform und unsere kulturelle Darstellung fernab von unserer Heimat weiter pflegen und behalten und an unsere Kinder weitergeben. Dies sehe ich als eine Verpflichtung von unserem Verein.

Der Vorstand hat mit Achtung, Toleranz und Respekt und noch mit viel mehr dazu beigetragen, diese Verpflichtung miteinander zu verwirklichen. Ich danke diesen Leuten und andere Freunden sehr herzlichst.

Wenn wir einzel-getrennt unsere Lebensform und kulturelle Darstellung pflegen wollen, ist dies kaum moeglich. Deshalb sollten wir alle zusammmen kommen und in einer Gemeinschaft nicht nur lernen unsere kulturelle Darstellung zu pflegen, sondern sie auch positiv fuer uns zu nutzen.

Mit freundlichen Gruessen

Sripathy Rodenhaeuser
Vorsitzender des Tamil-Mantram e.V.

Daniel Cohn-Bendit
Stadtrat



Stadt Frankfurt am Main

3.12.1991

Tamil Mantram e.V
Westendstr. 92
6000 Frankfurt am Main 1

Sehr geehrte Damen und Herren,
liebe Freundinnen und Freunde,

zum 3-jährigen Gründungsjubiläum des Tamil Mantram e.V. beglückwünsche ich Sie sehr herzlich.

In Frankfurt am Main sind viele Kulturen vertreten, die täglich aktiv teilhaben an dem Erfolg unserer Stadt. Ich bin davon überzeugt, daß die Präsentation der verschiedenen Kulturen, Lebensweisen und Philosophien, die von den Menschen verschiedener Herkunft in unsere multikulturelle Stadtgesellschaft eingebracht werden, für uns alle von großer Bedeutung sind.
Wir gehen davon aus, daß die Darstellung der verschiedenen Kulturen in unserer Stadt einen Weg aufzeigt, in dem sich die unterschiedlichen Menschen näherkommen und vertrauter werden im Umgang miteinander. Nur so kann aus dem multikulturellen Nebeneinander ein Zusammenleben entstehen, das von gegenseitigem Respekt, Achtung und Toleranz geprägt ist.
Auch Sie schaffen mit Ihrer Arbeit den Rahmen für Gespräche, die unsere Unterschiedlichkeit, aber auch unsere Gemeinsamkeiten herausarbeiten.

Ich wünsche Ihnen eine schöne Jubiläumsfeier und für Ihre weitere Arbeit alles Gute.

Mit freundlichen Grüßen

Daniel Cohn-Bendit

Multikulturelle Angelegenheiten
Barckhausstraße 1-3, 6000 Frankfurt am Main 1, Telefon (069) 212-38767

டானியல் கோன்–பெண்டிற்
நகர ஆலோசகர்

பிராங்பேர்ட் நகரம்

தமிழ் மன்றம்
வெஸ்ரெண்ட் வீதி 92
6000 பிராங்பேர்ட் 1

3.12.1991.

அன்பான திருவாட்டிகளுக்கும் திருவாளர்களுக்கும்,
அன்பான நண்பிகளுக்கும் நண்பர்களுக்கும்,

தமிழ் மன்றத்தின் மூன்றாவது ஆண்டுவிழாவிற்கு எனது உளம் கனிந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பல்வேறு கலாச்சாரங்கள், எங்கள் நகரத்தின் முன்னேற்றத்திற்கு நாளாந்தம் பக்கபலமாக நின்று பங்களிக்கின்றன. வெவ்வேறு பிரதேசங்களில் இருந்து வரும் மக்களின் கலாசாரங்கள், வாழ்க்கை முறைகளினது தத்துவங்களின் பிரதிபலிப்பை, எமது பல்கலை கலாச்சார நகர் வாழ் சமூகத்திற்கு அறிமுகப்படுத்துவது மிகவும் முக்கியம் என்பது எனது எண்ணம். ஒருவரை ஒருவர் மதித்து நடத்தல், சமாளித்து நடத்தல் போன்ற ஒற்றுமையாலே இப்படியான கலாச்சார வாழ்க்கையை உண்டாக்க முடியும். உங்கள் செயற்பாடுகள் மூலம், எங்களுக்குள்ளான வேறுபாடுகள் மாத்திரம் இன்றி, எங்கள் ஒற்றுமைகளையும் வெளிக்கொண்டுவர தேவையான சந்திப்புகளுக்கு வாய்ப்பளித்துள்ளீர்கள்.

தங்கள் மூன்றாவது ஆண்டுவிழா சிறப்பாக நடைபெறவும், தொடர்ந்து தங்கள் செயற்பாடுகள் நிலைக்க வாழ்த்துகின்றேன்.

அன்பான வாழ்த்துக்களுடன்,
டானியல் கோன்–பெண்டிற்.

ZIALDIENST FÜR FLÜCHTLINGE
ENTRALE BERATUNGSSTELLE

ainzer Landstraße 351, 7. Stock
-6000 Frankfurt am Main 1

EVANGELISCHER
REGIONALVERBAND
FRANKFURT AM MAIN

zialdienst für Flüchtlinge Mainzer Landstraße 351 D-6000 Frankfurt 1

☏ 069/21230, 241, 242, 245, 371, 372, 373

n Kooperation mit

CARITASVERBAND FRANKFURT e.V. – 230
B-JUGENDSOZIALWERK e.V. – 373
NTERNATIONALER SOZIALDIENST e.V. – 230
SOZIALAMT DER STADT FFM – 239

we/lp Frankfurt a.M., 28.11.91

Liebe Mitglieder von Tamil-Mantram,

Im Laufe dieses Jahres haben sich enge Kontakte zwischen unserer Einrichtung und Ihrer Organisation, vertreten durch Herrn Gunaratnam, ergeben.

Wir haben uns über die gute Zusammenarbeit gefreut und hoffen diese noch lange fortführen zu können.

In diesem Sinne wünschen wir Ihnen alles Gute für das kommende Jahr und viel Erfolg bei Ihrer weiteren Arbeit.

SOZIALDIENST FÜR FLÜCHTLINGE
i.A.

(Karl Westerwick)

அகதிகளுக்கான சமூகசேவை நிறுவனம்.
மத்திய ஆலோசனை நிலையம்.

we/1p பிராங்போட் 28.11.91

அன்பின் தமிழ் மன்ற நிர்வாகிகளுக்கு,

இந் நடப்பு வருடத்தில் எங்கள் நிறுவனத்திற்கும் உங்களுடைய மன்றத்திற்கும் இடையிலான தொடர்புகளை திருவாளர் குணரட்ணம் மூலம் நீங்கள் பெற்றிருக்கின்றீர்கள்.

இதன் பிரகாரம் நீங்கள் எங்களுக்கு வழங்கிய நல் ஒத்துழைப்பையிட்டு நாங்கள் மிக மகிழ்ச்சியடைவதோடு இத் தொடர்பு மேன் மேலும் நீண்டகாலத்திற்கு நிலைத்திருக்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

இவ்வேளையில் வரவிருக்கும் புத்தாண்டில் நீங்கள் எல்லா நலங்களையும் பெற்று வாழவேண்டும் என்றும், இம் முயற்சி பிரசித்திபெற்று மேலும் வளரவேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

அகதிகளுக்கான சமூக சேவை நிறுவனம்.

ஒப்பம் கார்ல் வெஸ்ரெர்விக்



Sehr geehrte Mitglieder und Freunde von Tamil Mantram,

zu dem dreijährigen Gründungsjubiläum von Tamil Mantram möchte ich Ihnen im Namen der Weißfrauen-Gemeinde sehr herzlich gratulieren!

Seit der Gründung von Tamil Mantram treffen Sie sich aus dem ganzen Rhein-Main-Gebiet in den Räumen unseres Gemeindehauses zu Ihren Versammlungen und Festen.

Sie pflegen die alten, ehrwürdigen Traditionen Ihrer heimatlichen Kultur und Religion und geben Ihren Landsleuten auf diese Weise Heimatgefühl in der Fremde.

Sie helfen Ihren Landsleuten in Sri Lanka, die in großem Flüchtlingselend leben.

Wir wünschen Ihnen auch in Zukunft gutes Gelingen für Ihre Arbeit und hoffen weiterhin auf eine gute Zusammenarbeit zwischen der Weißfrauen-Gemeinde und Tamil Mantram!

Mit herzlichen Grüßen,

Ruth Warnecke-Berg

Ruth Warnecke-Berg
Vorsitzende des Kirchenvorstandes

அன்பு மிக்க தமிழ் மன்ற அங்கத்தவர்களுக்கும்,
மற்றும் நண்பர்களுக்கும்,

தமிழ் மன்றத்தின் மூன்றாவது ஆண்டுவிழாவிற்கு ''வைஸ்பிறவன் – வேதாலயத்தின்'' (Weissfrauen-Gemeinde) சார்பாக எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன்.

தமிழ் மன்றம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து தங்களது நிகழ்ச்சிகளிற்கும், கொண்டாட்டங்களிற்கும் எங்கள் வேதாலயத்தைப் பயன்படுத்தி, அன்னியநாட்டில் தாயகக் கலாச்சாரத்தை உணரக்கூடியதாக நடாத்தி வருகின்றீர்கள்.

இலங்கையில் அகதிகளாக அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப் பவர்களுக்கு உதவி புரிகின்றீர்கள்.

தங்களின் எதிர்கால செயற்பாடுகளுக்கு வாழ்த்துகள் கூறுவதுடன் ''வைஸ்பிறவன் – வேதாலயத்திற்கும்'' தமிழ் மன்றத்திற்கும் இடையில் சிறந்த ஒருங்கிணைப்பாக செயல்படுவோம் என நம்புகின்றேன்.

இதயங்கனிந்த வாழ்த்துக்களுடன்,
ரூத் வார்ளொக்க-பேர்க்
தலைவர், வேதாலயச்சபை.

# ஆண்டறிக்கை

முத்தமிழை வளர்த்திடுவோம், அதை மூச்சாக காத்திடுவோம், அவ்னாடமெல்லாம் பரந்து நாம் வாழ்ந்தாலும் தமிழை உயிராக மதித்திடுவோம். இந்த உள்ளுணர்வோடு தமிழ் வளர்க்கவும், தமிழ் காக்கவும் முனைந்த தமிழ்ப் பெரும் மக்கள் ஜேர்மனியின் பிராங்பேர்ட் நகரின் 10.12.1988 அன்று ஒன்றாக இணைந்து உருவாக்கிய பிராங்பேர்ட் தமிழ் மன்றம் இன்று வளர்ந்து, பல வெற்றிப் படிகளைத் தாண்டி, மிடுக்கோடு தன் நான்காவது ஆண்டுப் பருவத்தில் நுழையும் இவ்வினிய வேளையில் நாம் எமது கடந்த சேவையாண்டில் சந்தித்தவற்றையும், சாதித்தவற்றையும் தொகுத்து மூன்றாம் ஆண்டறிக்கையாக உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பூரிப்பும், பெருமையும் கொள்கின்றோம்.

**''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனை**
**சான்றோன் எனக்கேட்ட தாய்''** என்பது குறள். நாம் ஒன்றிணைந்து தமிழ் மன்றம் ஒன்றை உருவாக்கிவிட்டோம். அதை நேர்வழியில் நடாத்தி தமிழுக்கும், தமிழருக்கும் களங்கம் ஏற்படாதவாறு வளர்த்து ஓர் ''சான்றோன்'' ஆக்குவது என்பது ஓர் அரும் செயல், இப்பனியில் தடங்கல்களும், தடைகளும் ஏற்படாமல் இல்லை. ஆனால் தடைகளை தகர்த்தும், தடங்கள்களைக் கடந்தும் எம்மன்றம் வளர்ச்சிப் பாதையில் வீறுநடை போடுகின்றது என்று சொன்னால் அது மிகையாகாது. இதற்கு காரண கர்த்தாக்கள் என்று சொல்லப்பட வேண்டியவர்கள், ஜேர்மன் வாழ் தமிழ் மக்ககள்தான். அவர்களது ஆர்வத்தையும் பொருளாதார ஒத்துழைப்பையும் ஒன்றிணைத்து செயற்திறன் வாய்ந்த எமது நிர்வாகக் குழு, மன்றத்தை பல சிரமங்களுக்கு மத்தியிலும் முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்கின்றது. தொண்ணூற்றியோராம் ஆண்டு மார்கழித் திங்கள் இருபத்தியிரண்டாம் நாளில் எம்மன்றத்தின் இரண்டாவது ஆண்டு விழா, கலை நிகழ்ச்சிகளோடும் சிறப்புரைகளோடும், பரிசளிப்புகளோடும் இனிதாக நடந்தேறியது. பரிசளிப்பு விழாவின் போது தமிழ் வகுப்பின் சிறந்த மாணவ மாணவிகளுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. பரிசுப் பொருட்களுக்குரிய செலவை ஆசிரியரே பொறுப்பேற்றுக்கொண்டார். அவ்வாறே சாதனைகள் படைத்த எமது கிறிக்கெட் அணிக்குரிய கிண்ணங்களின் செலவை எமது விளையாட்டுக் குழு பெருந்தன்மையோடு பொறுப்பு எடுத்துக்கொண்டது.

31.03.1990 அன்று நடந்த மன்றத்தின் இரண்டாவது பொதுக்கூட்டத்தின் போது, பொது வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்ட இருபத்தியாறு உறுப்பினர்களைக் கொண்ட

நிர்வாகசபை மன்றத்தின் வளர்ச்சி நோக்கங்களிற்காக தொடர்ந்து இரண்டு வருடங்கள் நிர்வகத்தை பொறுப்பெடுக்க வேண்டும் என்று முடிவானதின் பேரில், புதிய நிர்வாகசபையைத் தெரிவு செய்யும் அவசியம் ஏற்படாத போதும் மன்றம் தனது மூன்றாவது ஆண்டுப் பொதுக்கூட்டத்தை பங்குனி மாதம் பதினாறாம் திகதியன்று கூட்டி, மன்ற உறுப்பினர்களுக்கு தமது செயற்பாடுகளை விளக்கியதோடு, மன்றத்தின் எதிர்காலத் திட்டங்களையும் அங்கத்தினர் முன் சமர்ப்பித்து அவர்களது கருத்துக்களையும், விமர்சனங்களையும் கேட்டுக் கொண்டது. ஈழத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற உயிரிழப்புக்களினாலும், அசம்பாவிதங்களினாலும் மன்றத்தினுடைய நிகழ்ச்சிகளை குறைத்துக்கொள்வது அவசியமில்லை என்பதும், ஆனால் மன்ற நிகழ்ச்சிகளை அதிக ஆடம்பரம் இல்லாமல் நடாத்துவதில் தவறில்லை என்பதும் அன்று தெரிவிக்கப்பட்ட முக்கிய விடயமாகும். அத்தோடு தமிழ் மன்ற நிகழ்ச்சிகள் முன்பே திட்டமிட்டு நடாத்தப்பட்டு வந்தாலும், ஒரு போதும் நேர ஒழுங்கை கடைப்பிடிக்கப்படுவது இல்லை என்று அங்கத்தவர்களின் விமர்சனத்திற்கு, நிர்வாகசபை அத்தவறை நிவர்த்தி செய்ய முனைவதாக வாக்களித்ததோடு, அதன் பின்பு நடந்த அனைத்து மன்ற நிகழ்ச்சிகளும் திட்டமிடப்பட்ட நேர ஒழுங்குப் பிரகாரம் நடாத்தப்பட்டு வந்திருக்கின்றன.

இவ்வாண்டு மன்றத்தின் நிர்வாகம் தொடர்பான செயற்பாடுகளில், மன்றத்தை சட்ட பூர்வமாகப் பதிவு செய்து கொண்டது முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியது. பல நிபந்தனைகளையும், சட்டவியல் நுணுக்கங்களையும் கவனத்தில் எடுத்து, அவற்றிற்கிணைய எம் பிராங்பேர்ட் தமிழ் மன்றம், **Tamil Mantram e.V.** என்ற பெயரில் **9746** என்ற இலக்கத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. எம் மன்றத்தின் அடிநாதம், அரசியல் வர்த்தக நோக்கமின்றி, தமிழுக்கும், தமிழருக்கும் சேவை செய்வதும், அதன் கலைகளை வளர்ப்பதுந்தான் என்பதை நிரூபணம் செய்து பதிவை பெற்றுக் கொள்வது எமக்கு ஓர் பெரும் சவாலாகவே இருந்து வந்திருக்கின்றது. ஆனாலும் நாம் எமது கொள்கையில் இருந்து விலகவில்லை என்பதை நிரூபித்து எம் மன்றத்தைப் பதிவு செய்து கொண்டபின், ஜேர்மன் அரசாங்கத்தின் வெளிநாட்டவர் கலை கலாச்சாரத்திற்குப் பொறுப்பான இலாகா எமக்கு பல உதவிகள் புரிவதாக வாக்களித்து இருக்கின்றது. அத்தோடு எமக்கு எப்போதுமே உதவிக் கரம் நீட்டி வந்த கரிதாஸ் நிறுவனமும், எமக்கு மேலும் பல உதவிகளைப் புரிய முன் வந்திருக்கின்றது. இவர்களது ஒத்துழைப்பால் எமது நிகழ்ச்சிகளுக்குரிய மண்டபங்களை ஒழுங்கு செய்வதற்கும், சிறுவர் பாடசாலை, வளர்ந்தோர் ஜேர்மன் மொழிக் கல்வி போன்ற மன்றத்தின் மற்றைய சேவைகளுக்குப் பல

**17 ஆம் பக்கம் தொடரும்....**

# PROGRAMMFOLGE

**Gebet**
**Vereinslied**
**Lobgesang auf die tamilische Sprache**
**Ansprache des Praesidenten**
**Begressung**
**Jahresueberblick**
**Jahresbilanz**
**Die Gewinner der 1.Preis im Redewettbewerb**
**halten ihre Rede.**
**Thurka Gunaratnam**
**Srisanger Sinaraja**
**Die Gewinner der 1.Preis im Gesangswettbewerb**
**tragen ihre Liedr vor.**
**Thurka Gunaratnam**
**Sinthuja Kirubakaran**

**** Thematische Rede ****

**Paratha Nadiyam (Besonderes Kinderprogramm)**
**unter der Leitung von**
**Frau. Vanathy Thesinguraja**
**Vani Narththanalaiam e.V (Frankfurt)**

**Pause**

**Floetenzwischenspiel**
**S.Kesavan, S.Thayaparan**
**K.Pramanshan, M.Kunaratnam**

**Theater "Kaththavarajan"**
**unter der Leitung von**
**Fraeulein. Jeyanthi Kumarasamy**

**Verabschiedung und Danksagung.**

# நிகழ்ச்சிநிரல்

இறைவணக்கம்
மௌன அஞ்சலி
மன்றகீதம்
தமிழ்மொழி வாழ்த்து
தலைவர் உரை
வரவேற்புரை
ஆண்டறிக்கை – காரியதரிசி
வரவு செலவு அறிக்கை – பொருளாளர்
பேச்சுப் போட்டிகளில் முதலாவது பரிசு பெற்றவர்களின் பேச்சு
செல்வி. துர்க்கா குணரட்னம் (கீழ்ப்பிரிவு)
செல்வன். ஸ்ரீ சங்கர் சின்னராஜா (மேற்பிரிவு)
பாட்டுப் போட்டிகளில் முதலாவது பரிசு பெற்றவர்களின் பாட்டு
செல்வி. துர்க்கா குணரட்னம் (கீழ்ப்பிரிவு)
செல்வி. சிந்துஜா கிருபாகரன் (மேற்பிரிவு)

*** சிறப்புச் சொற்பொழிவு ***

வாணி நர்த்தனாலயம் e.V. (Frankfurt) வழங்கும்
பரத நாட்டிய நிகழ்ச்சி
''புஸ்பாஞ்சலி''**''அலாரிப்பு''**''பூஜாநடனம்''
''பதம்'' (மீனாட்சி தாயே)**''அபிநயநடனம்''**''குறத்தி''
''செந்தமிழ் நாடு என்னும் போதினிலே''
தயாரித்து வழங்குபவர்
திருமதி. வானதி தேசிங்குராஜா
(பங்குபற்றுபவர்களின் விபரம் மறுபக்கத்தில்)

**இடைவேளை**

புல்லாங்குழல் இசை
புல்லாங்குழல்
செல்வநாயகம் கேசவன்
செல்வநாயகம் தயாபரன்
மிருதங்கம் – க.பரமாண்டின்
தபேலா – மு. குணரட்னம்

பரிசளிப்பு

''காத்தவராயன் கூத்து''
தயாரித்து வழங்குபவர்
செல்வி. ஜெயந்தி குமாரசாமி

**நன்றியுரை**

# நடனங்களும் பங்கு பற்றுவோரும்

''புஸ்பாஞ்சலி''

* கவிதா கனகராயர்
* கிருஷ்ணா கனகராயர்
* நிரோசிகா இராஜரட்ணம்

''அலாரிப்பு''

* பிரேமறஞ்சினி தம்பியையா
* யசோதா நவரட்ணம்

''பூஜாநடனம்''

* நிஷானி நித்தியானந்தன்
* சிந்துஜா கிருபாகரன்
* பிறிந்தா அன்ரனி
* கஸ்தூரி இரட்ணகுமார்
* கிளவுடியா சூரியகுமார்

''அபிநயநடனம்''

* ரேணுகா சிவசிறி
* நிஷா பாலேந்திரன்
* விஜயன் பாலேந்திரன்

''குறத்தி''

* கிருஷ்ணா – நிஷானி
* கிளவுடியா – சிந்துஜா
* கஸ்தூரி – பிறிந்தா

''பதம்'' (மீனாட்சி தாயே)

* கிரிசாந்தி பாலசுப்பிரமணியம்
* நிரோஜி தேவராஜா
* மிருதுளா நரேந்திரகுமார்
* தர்மிளா சிவஞானம்

''செந்தமிழ் நாடு என்னும் போதினிலே''

* கவிதா கனகராயர்
* கிரிசாந்தி பாலசுப்பிரமணியம்
* நிரோசிகா இராஜரட்ணம்
* பிரேமறஞ்சினி தம்பியையா
* யசோதா நவரட்ணம்
* நிரோஜி தேவராஜா
* மிருதுளா நரேந்திரகுமார்
* தர்மிளா சிவஞானம்

13 ஆம் பக்கத் தொடர்

உதவிகள் அளிப்பதென வாக்கு அளிக்கப்பட்டு இருக்கின்றன. இந்த இரண்டு நிறுவனங்களுக்கும், மன்றம் தனது மனப் பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

இவ்வேளையில் இச்சேவையாண்டின் ஆரம்பத்தில் எமது மன்றத்தின் உப தலைவர் திரு. பே.தவராஜா அவர்கள் இடமாற்றம் காரணமாக பிராங்போர்ட் நகரை விட்டு வெளியேற நேர்ந்ததால், தனது பதவியை இராஜினமாச் செய்து கொண்டார். அப்பதவிக்காக நிர்வாகசபை கூடி தற்போதைய உப தலைவரை ஏகமனதாகத் தெரிவு செய்து கொண்டது.

எமது மன்றத்தின் இரண்டாவது ஆண்டு மலர் மன்றத்தின் உறுப்பினர்கள் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஓர் மலர்க் குழுவினால் பரீட்சார்த்தமாக கொம்பியூட்டர் அச்சுப் பதிப்பாக வெளியிடப்பட்ட போது, இவ்வாண்டு மலர் தொழில் முறைப் பதிப்புகளுக்கு நிகராக அமைந்திருந்தது. இதனால் எமது மன்றம் பொருளாதார ரீதியாக இம்மலர்ப் பதிப்பில் பெருந்தொகையான பணச் செலவை மிச்சப்படுத்தியதோடு, தொழில் முறையாக ஓர் கொம்பியூட்டர் பதிப்பகத்தை ''தமிழ் மன்றக் கொம்பியூட்டர் பதிப்பகம்'' என்ற பெயரில் மன்றத்தின் வரையறைகளுக்குள் அமைத்துக் கொண்டதோடு, தலைவரதும், பதிப்பக உறுப்பினர்களதும் உதவியோடும் ஓர் தரமான ஆங்கில – தமிழ் எழுத்துப் படிவத்தை கனடாவில் இருந்து பெற்றுக் கொண்டு பதிப்பகத்தின் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தினர். இப்பதிப்பகத்தில் சேவை புரிவதற்கென தமிழ் மன்ற அங்கத்தவர்களைப் பயிற்றுவித்துக் கொள்வதற்காக, ''கொம்பியூட்டர் தொழில் நுட்பத்தில் தமிழ் அச்சுப்பதிப்பு'' தொடர்பான புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வகுப்புகளில் எமது மன்றத்தின் பல பெண் உறுப்பினர்கள் பங்கு பற்றி வகுப்புகளின் முடிவில் தமிழ் மன்ற வெளியீடுகளின் போது இலவசமாகப் பதிப்பு வேலைகளில் உதவி புரிய முன் வந்தனர். அத்தோடு இப்பதிப்பகத்திற்கு தேவையான மின்னியல் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக இவ்வகுப்புகளுக்கு ஓர் நுழைவுக் கட்டணம் தீர்மானிக்கப்பட்டு, அப்பணத்தில் மிகவும் பெறுமதி வாய்ந்த பதிப்பக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இவ்வகுப்புகளில் இணைந்து கல்வி கற்பதில் மிக அதிகமானவர்கள் ஆர்வம் தெரிவித்ததால் மீண்டும் புதிய வகுப்புகள் ஆரம்பிப்பதற்கு தற்போது திட்டமிடப்பட்டு வருகின்றன.

எம் மன்றத்தின் கலை, கலாச்சார வெளியீடான ''தமிழ் நாதம்'' ஆரம்பிக்கப்பட்டு வைகாசி மாதம் தொண்ணூற்றியொன்றில்

சிறப்பாகத் தனது ஒரு வருடத்தைப் பூர்த்தி செய்திருந்தது. இவ்வேளையில் ஓர் சிறப்பான ஆண்டு மலரை நாம் வெளியிட முடியாது போயிருந்தாலும், தமிழ் நாதம் பத்திரிகைக் குழு, தமிழ்மன்றக் கொம்பியூட்டர் பதிப்பகத்தோடு இணைந்து தொழிற்பட ஆரம்பித்ததன் மூலம் ''தமிழ் நாதம்'' பத்திரிகை, கொம்பியூட்டர் அச்சுப் பதிப்பில் வெளிவர ஆரம்பித்திருக்கின்றது. தற்போது இப்பத்திரிகை தொழில் முறை அச்சுப் பதிப்புகளுக்கு ஈடாக வெளிவர ஆரம்பித்து இருக்கின்றது என்று சொன்னால் அதற்குரிய பெருமை எம் மன்றத்தின் இவ்விரு குழுக்களையுமே சாரும். தமிழ் நாதம் பத்திரிகையின் முதலாவது ஆண்டு மலர் பல சிறப்பு அம்சங்களோடு தயாராகி ஆண்டு விழாவின் போது வெளியிடப்பட இருக்கின்றது. எம் மன்றத்தின் இப்பத்திரிகை இலக்கியப் பத்திரிகைகளின் வரிசையில் முன்னணியில் இருக்கின்றது என்று சொல்லமுடியாது போனாலும்கூட, எம் பத்திரிகை மற்றைய பத்திரிகைகளுக்கு ஒன்றும் சளைத்ததல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் எமது பத்திரிகையில் இடம் பெற்ற ஆக்கங்கள், எமது அனுமதியுடன் ஈழத்தில் வெளிவரக்கூடிய இலக்கிய, உளவியல் சஞ்சிகைகளில் மறு பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன. இதுவே எம் பத்திரிகையின் தரத்திற்கு ஓர் சான்றாக அமைந்து விட்டிருக்கின்றது.

எம் மன்றத்தின் இசையார்வமிக்க அங்கத்தவர்களால் ஆரம்பிக்கப்பட்ட மன்றத்தின் இசைக்குழு, அதன் அங்கத்தவர்களின் ஆர்வத்தால் வளர்ச்சி அடைந்து, இன்று ஜேர்மனியின் மற்றைய நகரங்களில் இருக்கக்கூடிய பொதுவமைப்புகளால் இசை நிகழ்ச்சிகளுக்காக அழைக்கப்பட்டு தமிழ் மக்களிடம் பாராட்டுகளையும், பெரும் வரவேற்பையும் பெற்று வருகின்றது. இவ் இசைக்குழு ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் போதிய இசைக் கருவிகளும், போதிய கலைஞர்களும் இன்றி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. தற்போது எமது கலைஞர்களின் கூட்டு முயற்சியினால் பல இசைக் கருவிகளை வாங்கியும், பல புதிய கலைஞர்களைச் சேர்த்தும் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருப்பது குறிப்பிடத்தக்க விடயம். இத்தோடு இவ் இசைக்குழு தமிழ் மன்றத்தில் மட்டுமல்லாது வேறு இடங்களிலும் திருமண வைபவம், பிறந்தநாள் வைபவம் போன்றவற்றிலும் இசை நிகழ்ச்சிகள் நடாத்தி இருக்கின்றது. தற்போதும் பல புதிய கலைஞர்களை அறிமுகப்படுத்த இருக்கும் ''தமிழ் மன்ற இசைக்குழு'' தமிழ் மன்றத்தின் முன்னேற்றப் பாதையில் ஒரு மைல் கல்லாக இருக்கும் என்பது மிகையாகாது. அத்தோடு பிராங்போர்ட் நகரத்தில் அமைந்திருக்கும் கலைக்கண் வீடியோப் பத்திரிகை நிறுவனத்தினர் தமது முதலாவது வீடியோப் பத்திரிகையைத் தமிழ்

மன்றத்திற்குக் காணிக்கையாக்கி, வெளியிட்டு வைத்தபோது அதனால் கிடைக்கப்பெற்ற இலாபத்தை எம் மன்றத்திற்கே வழங்கியது இங்கு நன்றியோடு குறிப்பிடபட வேண்டியது.

பல குழுக்களாகப் பிரிந்து தனித்தனித் துறைகளில் பரிமளிக்கும் எம் மன்றம் பல சந்தர்ப்பங்களில் ஒன்றாக இணைந்து பூரணத்துவத்தை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்கள் எண்ணிலடங்கா! எமது மன்ற நிகழ்ச்சிகளாக இருந்தாலும், பிற நகரங்களில் நடக்கும் தமிழர் விழாக்களில் எம் மன்றத்தின் பங்களிப்பாக இருந்தாலும், விளையாட்டுத் துறையிலும், கலை நிகழ்ச்சியிலும் எம் மன்றம் காட்டி வரும் ஈடுபாடு சிறிதல்ல. மாய மந்திர ஜால வித்தைகள், சிறுவர் நாட்டிய நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், நாடகங்கள் போன்ற எம் மன்றத்தின் படைப்புகள் ஏனைய பல நகரங்களில் பெரும் வரவேற்பைப் பெறுகின்றன. தமிழ்க் கலைகளில் எம் சிறுவர் காட்டி வரக்கூடிய ஆர்வம் அளப்பரியது. பரதக்கலையில் அவர்களுக்கு இருக்கும் ஆர்வத்தை நாம் கண்டுகொண்டு இக்கலையுணர்வை வளர்க்கும் எண்ணத்தில் வாணி நர்த்தனாலயம் என்ற கலைக்கூடத்தில் எமது சிறார்கள் பரதக் கலையைக் கற்றுக்கொள்ள ஒழுங்குகள் செய்துள்ளோம். அதன் ஆசிரியையும், மாணவ மாணவிகளும், அவர்களின் பெற்றோர்களும், பொருளாதார ரீதியிலும், ஏனைய வழிகளிலும் ஆற்றி வரும் பங்களிப்பிற்கு மன்றம் நன்றி தெரிவிக்கும் கடமைப்பாடு உடையதாக இருக்கின்றது. அத்தோடு எமது மன்ற நிகழ்ச்சிகளில் நக்கீரர், உன்னையே நீ ஏமாற்றாதே ஆகிய நாடகங்களை மேடை ஏற்றிய நாடகக் குழுவினருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவற்றோடு தொடர்பாக எமது சிறுவர் தமிழ்ப் பாடசாலையும், வளர்ந்தோர் ஜேர்மன் வகுப்புகளும் மன்றம் ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் இருந்து தொடர்ந்து நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக சில காலங்கள் ஜேர்மன் வகுப்புகள் நடைபெறவில்லை என்றாலும் கூட மீண்டும் இவ்வகுப்புகள் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன. சிறுவர் தமிழ்ப் பாடசாலையும் திருப்திகரமாக நடைபெற்று வருகின்றது என்று சொல்ல முடியாது. முதலாவதாக வருகை தரும் மாணவர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாக இருப்பதும், அடுத்து வரக்கூடிய மாணவர்களில் ஒவ்வொருவரும் வெவ்வேறு வயதெல்லைகளில் இருப்பதால் அவர்கள் அனைவரையும் ஒரே நிரையில் வைத்து பயிற்றுவிப்பதுவும் நடைமுறைக்கு ஒவ்வாததாக இருக்கின்றது. மேலதிக ஆசிரியர்கள் வகுப்புகளை நடாத்துவதற்கு தயாராக இருந்தாலும், பெற்றோர்கள் தம் குழந்தைகளின் தமிழறிவு வளர்ச்சியில் காட்டக்கூடிய அக்கறையிலேயே இவ்வகுப்புகளை

ஒழுங்கு செய்வது தங்கி இருக்கின்றது. கலை நிகழ்ச்சிகளில் தங்கள் குழந்தைகளின் பங்களிப்பில் அதிக ஆர்வம் காட்டி வரும் பெற்றோர்கள், தம் குழந்தைகளின் தாய்மொழி அறிவு வளர்ச்சியிலும் அதிக அக்கறை காட்ட வேண்டும் என்பதே மன்றத்தின் அவா.

இதேவாறே பிராங்பேர்ட் நகர் வாழ் தமிழ் மக்களுக்காக எமது தமிழ் மன்றத்தால் நூலகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு பல நூல்கள் சேகரிக்கப்பட்டும், நூலகர்கள் கடமையாற்றி வருகின்ற போதும், மிகமிகக் குறைவானவர்களே நூல்களைப் பெற்றுப் பயனடைவது மிகவும் வேதனைக்குரியது. தமிழ் மக்களுக்காக அமைக்கப்பட்டு இருக்கக்கூடிய இவ்வறிவகம் மக்களுக்குப் பயனுள்ளதாக அமைவது உங்கள் ஆர்வத்திலும் அறிவு வேட்கையிலுந்தான் தங்கி இருக்கின்றது. இங்கு நாம் கூறக்கூடியது தமிழில் காலம் காலமாகக் கூறப்பட்டுவரும், ''வாசிப்பதால் மனிதன் பூரணத்துவம் அடைகின்றான்'' என்பது ஒன்றுதான்.

மன்றத்தின் நிர்வாகச் செயற்பாடுகளைக் கூறுமிடத்து, மன்றம் நடாத்தி வரும் கலை நிகழ்ச்சிகளையும், ஆடி மாதம் நடாத்திய விளையாட்டுப் போட்டிகளையும் தவிர ஈழத்து நிலைமைகளால் வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களின் மனித உரிமைகள், அந்நாடுகளில் அரசியல் மாற்றங்களினால் பாதிப்படையுமிடத்து, சர்வதேச அமைப்புகளோடு தொடர்பு கொண்டு நிவாரணம் தேட முனைந்து வருகின்றது. உதாரணமாக ஜேர்மனியில் ஒருசில மாதங்களுக்கு முன்பு அரசியல் அகதி அங்கீகாரம் பெறாத தமிழ் மக்கள் திருப்பி அனுப்பி வைக்கப்படக்கூடும் என்ற நிலை தோன்றிய போது எமது மன்றம் துரிதமாகச் செயற்பட்டு ஐக்கிய நாடுகள் சபையோடு தொடர்பு கொண்டு எமது நிலையை விளக்கியதோடு, ஹெஸ்ஸென் (Hessen) மாநிலத் தலைமை அலுவலகம் அமைந்திருக்கும் வீஸ்பாடன் (Wiesbaden) நகரில், இந்நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஓர் ஊர்வலம் ஒழுங்கு செய்யப்பட்டு, இந்நடவடிக்கைக்கு எதிரான ஓர் பிரேரணை ஒன்றும் கையளிக்கப்பட்டது. இவ்வறே இந்தியாவில் வாழக்கூடிய இடம் பெயர்ந்த ஈழத்து மக்களை மீண்டும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பக்கூடிய நிலை தோன்றிய போது, மத்திய மாநில அரசுகளோடு தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்காக எம் மன்றம் பரிந்துபேசத் தவறவில்லை. அதேவேளையில் இலங்கையில் இராணுவ நடவடிக்கைகளினால் அகதிகளாக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு உதவிபுரியும் பல நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

ஜேர்மனியில் வாழக்கூடிய தமிழர்களிற்கு இக்கட்டான சூழ்நிலைகள்

ஏற்படும்போது, நாம் தமிழர்கள் என்ற உணர்வோடு உதவி செய்ய தமிழ் மன்றம் தயங்கியது இல்லை. மன்றத்திற்கு அங்கத்தவர்களாலும், மற்றையவர்களாலும் எழுதப்படும் கடிதங்கள் நிர்வாகசபை கூட்டங்களில் ஆராயப்பட்டு சரியான முடிவுகள் எடுக்கப்பட்டு வருகின்றன. உதாரனமாக தமிழ் மன்றம் பிற நகரங்களில் ஒழுங்கு செய்யும் நிகழ்ச்சிகளின் போது போக்குவரத்துக் கட்டணங்கள் அனைவரிடமும் வசூலிக்கப்பட்டு வந்தன. தற்போது ஓர் அங்கத்தவரின் கடிதத்தின் பின்பு மாணவர்களிடமும், பாடசாலைப் பிள்ளைகளிடமும் இந்தக் கட்டணங்கள் வசூலிப்பதில்லை என முடிவுசெய்யப்பட்டு இருக்கின்றது. இத்தகைய முன்னேற்றமான நடவடிக்கைகள் அங்கத்தவர்களின் விமர்சனத்திலேயே பெருமளவு தங்கியிருப்பதால் உங்கள் விமர்சனங்களைத் தமிழ் மன்றம் நன்றியோடு எதிர்பார்த்திருக்கின்றது.

அதேவாறு தமிழிற்கும், தமிழ் மக்களின் முன்னேற்றத்திலும் அக்கறை செலுத்துவோரை தமிழ் மன்றம் கௌரவிக்க விளைந்து வருகின்றது. இவ்வண்ணம் துருக்கியில் நடை பெற்ற உலகக் கவிஞர் மகாநாட்டில் கலந்து கொண்டு நாடு திரும்புகையில் பிராங்போர்ட்டில் தங்கிச் சென்ற பன்னாட்டுத் தமிழ் உறவு மன்றத் தலைவர் பெருங்கவிக்கோ திரு. வா.மு.சேதுராமன் அவர்களை தமிழ் மன்றம் கௌரவிக்க தவறவில்லை.

எமது மன்றத்தின் சேவைகள் எல்லாத் தமிழ் மக்களுக்குமே கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்தில் பிராங்போர்ட் வாழ் தமிழ் மக்கள் மட்டுமல்லாது பிற நகரங்களில் வாழும் தமிழர்களும் எமது மன்றத்தில் அங்கத்தவர்கள் ஆகுவதைத் தமிழ் மன்றம் வரவேற்கின்றது. இதே நோக்கத்திற்காகத்தான் தமிழ் மன்றம் தனது ஆரம்பக் குறிக்கோள்களில் ஒன்றான உலகத்தமிழர் தொடர்பு என்ற சேவையை விரிவு படுத்தி பல பிற நாடுகளில் வாழ்ந்து வரக்கூடிய தமிழ் மக்களுக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை எடுக்க இருக்கின்றது.

எம்மன்றம் இற்றை வரை கலை, இலக்கியப் பணிகளில் காட்டிவந்த அக்கறையும் ஆர்வமும் இன்னும் வளரவும், அதனால் தமிழ் மக்கள் அனைவரும் பயன் பெறவும் வேண்டும் என்றால் அது தமிழர்களாகிய உங்களுடைய ஆர்வமும், பங்களிப்பும் இன்றி நிறைவேறாது என்பது தெட்டத்தெளிவு. தமிழ் மக்களுக்காக உருவாக்கப்பட்ட இம்மன்றம் தமிழ் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டி தங்கள் ஆதரவையும், ஆசியையும் கேட்டு இவ்வறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமையடைகின்றது.

நன்றி

இங்ஙனம்,
ஒப்பம் மு. குணரட்ணம்.
செயலாளர் தமிழ்மன்றம்.

# ❋ INDO – CEYLON HOUSE ❋ DUESSELDORF

பிராங்பேர்ட் தமிழ் மன்ற மூன்றாவது ஆண்டுவிழா சிறப்பாக நடைபெற **INDO – CEYLON** ஸ்தாபனத்தினர் தங்கள் ஆதரவினை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றனர்.

ஜேர்மன்வாழ் தமிழ் மக்களுக்கு!

நாம் தற்போது இலங்கை, இந்தியா, தாய்லாந்து, போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்து எமது மக்களின் அன்றாட தேவையான சகல பொருட்களையும் குறைந்த விலையில் விற்பனை செய்து வருகின்றோம்.

கடந்த இரண்டு வருடங்களாக எமக்கு அளித்த ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவிப்பதுடன் தொடர்ந்தும் தங்களது ஆதரவை எதிர் பார்க்கின்றோம்.

## இனாம்! இனாம்!! இனாம்!!!

எமது அழகிய வண்ணப்படத்திலான 1992 ஆம் ஆண்டிற்குரிய புதிய கலண்டரை 31.01.1991 முன்பாக எமது விற்பனை நிலையத்தில் அன்பளிப்பாக பெற்றுக்கொள்ளலாம்.

நன்றி

என்றும் உங்கள் ஞாபகத்தில் இருக்கவேண்டியது !

INDO – CEYLON HOUSE,
WORINGER STR. 107,
4000 DUESSELDORF.
T.PHONE 0211/365317.
T.FAX 0211/1649382.

Duesseldorf பிரதான புகையிரத நிலையத்திற்கு வலது பக்கமாக 100 மீ. தொலைவில் அமைந்திருக்கின்றது.

*** INDO – CEYLON HOUSE. ***

***

# வரவு செலவுத் தொகுப்பு 1991

எமது மன்றத்தின் மூன்றாண்டு நிறைவு காலத்தில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட வரவு செலவுகளை உங்கள் முன் சமர்ப்பிப்பது எங்கள் தலையாய கடமையாகும். இவ்வரவு செலவுகளைத் தொகுத்து ஓர் திரட்டாக இங்கு வைப்பதில் நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

| | வரவு | செலவு |
|---|---|---|
| முன் இருப்பு (31.12.1990) | 70.00 | |
| அங்கத்தவர்கள் சந்தா வரவு | 4880.00 | |
| தமிழ்ப் பாடாசாலைக்கு நகர உதவி | 1400.00 | |
| ஜேர்மன் வகுப்பிற்கு கரிதாஸ் உதவி | 2000.00 | |
| ஆசிரியர்கள் அன்பளிப்பு | 3400.00 | |
| சிற்றுண்டி உணவுகள் விற்பனை | 2350.00 | |
| கலை நிகழ்ச்சிகளினால் வரவு | 760.00 | |
| பத்திரிகையினால் வரவு | 310.00 | |
| கொம்பியூட்டர் வகுப்பினால் வரவு | 1500.00 | |
| மண்டபம், கலைக்குழு அறைச்செலவு | | 4350.00 |
| இசைக்கருவிகள் கொள்வனவு | | 2258.00 |
| ஆசிரியர்கள் கட்டணம் | | 3400.00 |
| கொம்பியூட்டர் கொள்வனவு | | 2463.00 |
| விளையாட்டுத்துறைச் செலவு | | 5340.00 |
| பரிசுப் பொருட்கள் | | 2200.00 |
| பொதுச்செலவுகள் (தொலைபேசி, அச்சுப்பிரதிகள் ..) | | 760.00 |
| பத்திரிகைச் செலவு | | 320.00 |
| அன்பர்கள் கடன் உதவி | 4183.00 | |
| கையிருப்பு (30.11.1991) | ~~283.00~~ 228.00 | |
| | 21091.00 | 21091.00 |

தனாதிகாரி
ஒப்பம் வ.பத்மநாதன்

கணக்குப் பரிசோதகர்
ஒப்பம் லூக் லோகநாதன்

# விளையாட்டுக்குழு அறிக்கை

சுவர் இல்லாமல் சித்திரம் எழுத முடியாது பிள்ளைகளுக்கு சரிபலம் ஏற்படுத்தாமல் வெறுமே படிப்பு மாத்திரம் கொடுப்பதால், அவர்களுக்கு நாளுக்கு நாள் ஆரோக்கியம் குறைந்து, அவர்கள் படித்த படிப்பெல்லாம் பயனற்றும், அவர்கள் தீராத துக்கத்திற்கும், நோய்களுக்கும் இரையாகும்படி நேரிடும். உடல் வலிமைக்கும், உற்சாகத்திற்கும், சுறுசுறுப்பிற்கும் விளையாட்டுக்கள் இன்றியமையாதவை. இதனைக் கருத்திற் கொண்ட எமது மன்ற விளையாட்டுக் குழு கிறிக்கெட், உதைப்பந்தாட்டம் என பல விளையாட்டுக்களை நடைமுறைப்படுத்திப் பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளது.

குறிப்பாக, கிறிக்கெட் குழுவினர் ஈட்டிய சாதனை இவர்களின் சிகரமாககத் திகழ்கின்றது. இக்குழுவினை பிற இடத்துக்குழுக்களுடன் விளையாடுவதற்கான ஒழுங்குகளையும், நட்புறவுடன் விளையாடுவதற்கு மூலகர்த்தாவாகவும், கிறிகெட் குழுவின் முகாமையாளராகவும் இருந்த திரு. நரேந்திரகுமார் அவர்களையே குழுவின் பெருமைகள் சாரும். இவ்வருடம் கடந்தவருடத்தைப் போல் போஹூம் (Bochum) நகரில் நடைபெற்ற சுற்றுப்போட்டியில் 2வது இடத்தைப் பெற்றதோடு, ஆழிக்குமரன் ஆனந்தன் வெற்றிக்கிண்ணப்போட்டியில் காஸ்ற் (Karst) அணியை தோற்கடித்து வெற்றிக்கிண்ணத்தை சொந்தமாக்கிக் கொண்டது.

விளையாட்டுக்குழுவில் புதிதாக ஆரம்ப்பிக்கப்பட்டிருக்கும் உதைபந்தாட்டக்குழு ஆட்டத்தில் பெரு வெற்றிகளைச் சாதிக்காது போனாலும் கூட விளையாட்டுத் திறமையும், கட்டுப்பாடும் கொண்ட ஓர் அணி என பரிசுகளும், பாராட்டுகளும் பெற்றிருப்பது மிகவும் பெருமைக்குரிய ஓர் விடயமாகும். உதைபந்தாட்டக் குழுவிற்கு முகாமையாளராகவும், பயிற்சியாளராகவும், விளையாட்டு ஒழுங்குகளை மேற்கொள்வதற்கும் திரு. நரேந்திரசிங்கம் அவர்களே பொறுப்பாக இருந்து வழிகாட்டி வந்தார் என்றால் மிகையாகாது.

எமது விளையாட்டுக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் தம் குழுவிற்கு ஏற்படக்கூடிய பொருளாதாரத் தேவைகளைத் தாமாகமே முன் வந்து பொறுப்பேற்றுக் கொண்டது இங்கு அவசியம் குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

தமிழ் மன்றத்தின் பெயரையும், புகழையும் பிற நகரங்களில் வெளிப்படுத்தியதில் எமது விளையாட்டுக் குழு முக்கிய பங்கு

கொண்டுள்ளது. மன்றத்தின் விளையாட்டுக் குழு மன்ற நிர்வாகத்திற்கு அமைய எமது விளையாட்டுத் துறையினை வழி நடத்தியமையால், பிற நகரங்களில் எமது விளையாட்டு உறுப்பினர்களின் விளையாட்டுத் திறமையைப் பாராட்டியுள்ளார்கள்.

இதேவேளையில் எமது கிறிக்கெட் குழு சார்பில் குழுவின் தலைவர் திரு. பாலராஜா அவர்கள் காஸ்ற் யுனைற்றற் விளையாட்டுக் கழகத்துடன் எதிர்த்து விளையாடும் போது ஆட்டம் இழக்காமல் 100 ஓட்டங்களை எடுத்து எமது குழுவிற்குப் பெருமையைத் தேடித் தந்தமையையும் நாம் மறந்துவிடமுடியாது.

இங்ஙனம்,
விளையாட்டுக்குழு,
தமிழ் மன்றம்.

## விளையாட்டுக்குழுவிற்கு உதவி செய்தோர்

**உணவு:-**

எஸ். நரேந்திரசிங்கம்
பி. பாலராஜா
எஸ். யோகசிவம்
எஸ். ஆனந்தசெல்வம்
எஸ். நாகராஜா
தங்கவேலு
கிரீஸ்

**பணவுதவி:-**

எஸ். ஸ்ரீபதி
ஆர். செல்வரட்ணம்

**வாகன உதவி:-**

பி. பாலசுப்பிரமணியம்
பி. பாலராஜா
சி. ஜெயேந்திரா
எஸ். சிவகுமார்
கே. ஆனந்தன்
என். மோகனகிருஷ்ணன்
எஸ். ரவிசங்கர்
எஸ். சிவகுருநாதன்

**வெள்ளிக்கிண்ண அன்பளிப்பு:-**

சி. கனகராஜா
எஸ். நரேந்திரசிங்கம்
ரி. கனகலிங்கம்
தர்மகுலசிங்கம்

# கிறிக்கெட்குழு

பி.பாலராஜா (தலைவர்)
எம். குணரட்னம் (உப. தலைவர்)
எஸ். நரேந்திரகுமார் (முகாமையாளர்)
எஸ். ரவிசங்கர்
எம். ஜெயக்குமார்
வி. ஜெயேஸ்வரன்
ஆர். தவேந்திரன்
எஸ். முரளீதரன்
ஜே. ஜெயசிறி
ரி. சண்முகராஜா
ஆர். செல்வரட்னம்
எம். பிரபாகரன்
எஸ். விவேகானந்தன்
ஆர். கிறிஸ்
எம். விக்ரமன்
வி. பத்மநாதன்
ரி. நாகராஜா
எஸ். சிவகுமார்
எஸ். முருகானந்தன்

* சிறந்த துடுப்பாடிவீரன் பி. பாலராஜா
* சிறந்த பந்தெறிவீரன் ஆர். தவேந்திரன்
* சிறந்த பந்துகாப்பாளர் எம். குணரட்னம்
* சிறந்த சகல வல்லுனர் எஸ். ரவிசங்கர்

# உதை பந்தாட்டக்குழு

எம். குணரட்னம் (தலைவர்)
எஸ். முரளீதரன்
ஜெ. ஜெயசிறி
கே. ஜெயேந்திரன்
எச். சிறி
எம். பிரபாகரன்
கஜன்
மோகன்

6 பேர் கொண்ட குழு





விஜயதசமி தினத்தன்று தமிழ்ச் சிறுவர்களுக்கு திருமதி. கமலா கனகசபை அவர்கள் வித்தியா ஆரம்பம் செய்துவைக்கின்றார்.




தமிழ் மன்ற சிறுவர் நிகழ்ச்சியை சிறப்பித்த சிறுவர்களின் நாடகம்

# நன்றி நவில்கின்றோம்

தமிழை நெஞ்சிலும், தமிழர்களைத் தலையிலும், மானுடத்தைத் தனது மலைபோன்ற தோள்களிலும் தூக்கிச் சுமந்து திரிகின்ற இந்த சுந்தரத் தமிழை பெயராகக் கொண்ட எம்மன்றம் இன்று இவ்வளவு தூரம் வளர்ச்சி அடைய தமது சொந்த நேரங்களைப் பொருட்படுத்தாது அல்லும் பகலும் பாடுபட்ட இனியவர்களுக்கும், சிற்றூண்டிகள் தயாரித்து வழங்கிய எமதருமை சகோதரிகளுக்கும், நிதியுதவி அளித்தவர்களுக்கும், தமிழ் மன்றக் கல்வி நிலையத்தை கட்டிக் காக்கும் எமதருமை சகோதர சகோதரிகளுக்கும், ஒலி, ஒளி, வீடியோ போன்ற துறைகளில் தூண்களாக இருந்த நண்பர்களுக்கும், விளம்பரதாரர்களுக்கும், இவ்வாண்டு மலரை அழகுற கொம்பியூட்டர் உதவியுடன் துரித சேவையில் அச்சுப் பதித்து அளித்த மன்றக் கொம்பியூட்டர் பதிப்பக பொறுப்பாளர்களுக்கும், மன்ற இசைக் குழுவை முன்னேற்றப் பாதையில் நடாத்திச் செல்லும் சகோதர சகோதரிகளுக்கும், மன்ற விளையாட்டுக் குழுவைத் திறம்பட வழி நடாத்திச் செல்லும் விளையாட்டுக் குழுவினர்க்கும், மற்றும் நம்பிக்கையோடும், விடாமுயற்சியோடும் ஊக்கமளித்த அனைவர்க்கும் மன்றத்தின் சார்பாக எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகிகள்
தமிழ் மன்றம்
பிராங்போர்ட்.


இம் மலரானது தமிழ் மன்றக் கொம்பியூட்டர் பதிப்பகத்தினால் அச்சிடப்பட்டு 21.12.1991 அன்று பிராங்போர்ட் தமிழ் மன்றத்தினால் வெளியிடப்பட்டது.

---

**Printed by TAMIL MANTRAM COMPUTER PRINTERS and published by Tamil Mantram e.V Frankfurt on 21.12.1991.**

# Committee

Mr. S. Narendrasingam
Mr. P. Balarajah
Mr. R. Jeyendra
Mr. S. Kulendran
Mr. T. Krishnathas
Mr. S. Kesavan
Mr. S. Narenthirakumar
Mr. K. Ravindran
Mr. K. Rajendran
Mr. R. Segar
Mr. A. Sornalingam
Mr. R. Ravisangar
Mr. M. Thirunavukkarasu
Mr. T. Yogesvaran
Mr. R. Yasotharan
Mr. S. Sivakumar
Mr. S. Balachandran






திருமண வைபவங்களா, பூப்புனித நீராட்டு விழாக்களா
எல்லாவகையான வைபவங்களுக்கும் தேவையான

கூறைச் சேலைகள், பனார்ஸ் சேலைகள்,
மைசூர் சில்க் சேலைகள், காஞ்சிபுரம் சேலைகள்,
பட்டு வேட்டிகள், குர்தா

* ஆண்கள், பெண்கள், சிறுவர்களுக்கான அனைத்துரக புடைவைகள்
* 22 கரட் தங்க நகைகள்
* அன்றாட உணவுப் பொருட்கள்
* VIDEO, AUDIO, C.D. கசட்டுகள்
* பத்திரிகைகள், சஞ்சிகைகள்

அனைத்தையும் ஒரே இடத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும்
மலிவாகவும் பெற்றுக்கொள்ள நாடிவாருங்கள் திலீப்பிற்கே!







" நம்பிக்கைக்குத் திலீப்
நாணயத்திற்குத் திலீப்
திலீப்பிற்கு நிகர் திலீப்பே "

குறித்த தவணையில் 22 கரட் தங்கத்தில்
உங்களுக்கு வேண்டிய டிசைன்களில் செய்து கொடுக்கப்படும்

## திலீப் ரீடேஸ்

Private: M. GUNA
Tel: 069/ ~~40399~~ 469117
V. KUKAN
Tel: 02761/ 40399

TAUNUSSTRASSE 17 A.
6000 FRANKFURT. MAIN 1.
WEST GERMANY.
TEL: 069/ 250361
FAX: 069/ 234045